# உள்ளே...


பக்கம்-4



கருநாகம்

பக்கம்-202




இரண்டாவது நிலா

பக்கம்-364




என்னைத் தொடாதே

பக்கம்-282




நடுநிசி நேரம்

பக்கம்-456



கான்ஸ்டபிள்
கண்ணம்மா

# கருநாகம்

## 1

பங்களாவின் உள்ளே கூடத்தில் இருந்த தொலைபேசி மணி அடித்தது.

தொலைபேசியைக் கவனிக்கக் கூடத்தில் எவரும் இல்லை. தொலைபேசி மணியடிக்கும் ஓசை பங்களாவின் மாடியிலும், தோட்டத்திலும் நன்றாகக் கேட்டது. ஆனாலும் –

தொலைபேசியை எடுக்க எவரும் வரவில்லை. அது விடாமல் அடித்துக்கொண்டிருந்தது!

பணியாள்கள் எவரும் அப்போது அங்கே இல்லை. தோட்டக்காரன் மட்டும் தோட்டத்தில் செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றிக்கொண்டிருந்தான். தொலைபேசியின் மணி அடிப்பது அவனுக்கு நன்றாகக் கேட்டது. ஆனால் கூடத்துக்கு வந்து தொலைபேசியை எடுத்துப் பேச அவனுக்கு உள்ளத்தில் உறுதி இல்லை!

மாடியில் இருந்த ஓர் அறையில் வல்லவராயன் சரித்திரப் புத்தகம் ஒன்றைப் படித்துக்கொண்டிருந்தார், எப்போது பார்த்தாலும் ஏதாவது சரித்திரக் கதைகளைப் படித்துக் கொண்டிருப்பார் அவர். தொலைபேசி மணியடிக்கும் ஓசை கேட்டும் கூட அவர் புத்தகத்தை மூடி வைத்துவிட்டு எழுந்து போக மனமில்லாமல் படித்துக்கொண்டிருந்தார்

மாடியின் மற்றோர் அறையில் –

அறிவழகு எங்கேயோ வெளியே போகப் புறப்பட்டுக் கொண்டிருந்தான். இருபது வயது இளைஞன் அவன். கல்லூரியில் இரசாயன ஆராய்ச்சியைப் பற்றிபடித்துக் கொண்டிருந்தான், அவன் மனம், “தொலைபேசி இவ்வளவு நேரம் அடித்துக்கொள்கிறதே! இதைக் கவனிக்க இங்கு எவருமே இல்லையா? ஒரு காலத்தில் ஒரு பெரிய ஊரையே ஆண்டுவந்த இந்த அரச குடும்பத்தில் இப்போது தொலைபேசியை எடுத்துப் பேசக்கூட ஆள் இல்லை! எல்லாம் எங்கே போய்விட்டிருப்பார்கள்?” என்று எண்ணியது.

வெளியே அவனுடைய சிவப்பு ஸ்போர்ட்ஸ் கார் நின்றிருந்தது, போகும்போது கூடத்தின் வழியாகத்தானே போக வேண்டும். அப்போது தொலைபேசியைக் கவனிக்கலாம் என்று பௌடர் போட்டுக்கொண்டிருந்தான்.

பக்கத்து அறையில் சாய்ந்து படுத்துக்கொண்டிருந்த கலையரசிக்குத் தொலைபேசி மணியடிப்பது தலை வேதனையாக இருந்தது. அவள் சும்மாயிருந்தது தான் அதற்குக் காரணம் போகலாமா வேண்டாமா? என்ற சிந்தனையுடன், சோம்பலுடன் படுத்துக் கிடந்தாள்.

தொலைபேசியில் அழைப்பது எவராக இருக்கும்?–

எப்போதுமே ஆவலை அடக்க முடியாதவர்கள் பெண்கள். ஆகையால், அவள் மெல்ல எழுந்து நடந்தாள். பதினேழு வயது நிரம்பிய அவள் உயரமாக எடுப்பாக வளர்ந்திருந்ததைக் கண்டு கல்லூரியிலேயே பலர் வியப்படைந்திருக்கிறார்கள்! அவளுக்கு

என்ன? அரச குடும்பத்தைச் சேர்ந்தவள். கவலையற்ற வாழ்வு, தன்னுடைய அழகைக் கவனித்துக்கொள்வது. தான் அவளுக்குக் கலை, என்று அவளுடைய தோழிகள் பேசிக்கொள்வார்கள் அவள் எதிரிலேயே. அவள் மாடிப் படிகளைக் கடந்து, கூடத்தை அடைந்தபோது–

தொலைபேசி தொடர்ந்து மணி அடித்துக் கொண்டிருந்தது.

கலையரசி தனது அழகிய இடக்கையை நீட்டித் தொலைபேசியை எடுத்து மெல்லிய குரலில் ''ஹலோ'' என்றாள்.

போலீஸ் இலாகாவிலிருந்து உதவிப் போலீஸ் கமிஷனர் பேசுகிறேன். மல்லையாவின் பங்களாதானே அது? என்றொரு குரல் வந்தது.

"ஆமாம்."

"பேசுவது யார்?"

"கலையரசி. மல்லையாவின் மகள் நான், உங்களுக்கு யார் வேண்டும்?"

"மன்னிக்க வேண்டும். முதன் முதலில் உங்களிடம் ஒரு துக்கமான செய்தியைச் சொல்ல வேண்டியவனாக தான் இருக்கிறேன்."

"துக்கமான செய்தியா! என்ன அது? சொல்லுங்கள்"

"உங்கள் தந்தை மல்லையா சென்றுகொண்டிருந்த கார் ஒரு பெரும் விபத்துக்குள்ளாகிவிட்டது."

"விபத்தா! எங்கே ? அப்பா எப்படியிருக்கிறார்?"

"விபத்தில் அதே இடத்தில் இறந்துவிட்டார்?"

''ஐயோ, அப்பா!'' என்று கத்தினாள் கலையரசி! அவளுக்குக் கண்களை இருட்டிக்கொண்டு வந்தன.

மாடிப்படிகளில் இறங்கி வந்து கொண்டிருந்த அறிவழகு அவள் கத்துவதைக் கேட்டதும் ஓடிவந்து தொலைபேசியை வாங்கிக்கொண்டு. கீழே விழப்போன அவளைப் பிடித்து மெல்ல உட்காரவைத்து, "என்ன கலையரசி! அப்பாவுக்கு என்ன?" என்றான்.

"கார் விபத்தில் அப்பா இறந்துவிட்டாராம்!" என்று சொல்லிவிட்டு விம்மியபடி அவள் அப்படியே சோபாவில் சாய்ந்துவிட்டாள்.

"அறிவழகு கையில் தொலைபேசியுடன் சிறிது நேரம் அப்படியே சிலை போல நின்றுவிட்டான்! பிறகு ஹலோ! பேசுவது யார்?" என்றான் தொலைபேசியில்.

"உதவி போலீஸ் கமிஷனர் பேசுகிறேன். மல்லையா சென்றுகொண்டிருந்த கார் பூவிருந்தவல்லி சாலையில் ஒரு மரத்தின்மீது மோதி நொறுங்கிவிட்டது! மல்லையா அதே இடத்தில் இறந்துவிட்டார்."

"பூவிருந்தவல்லி சாலையில் எந்த இடத்தில்?" என்று கேட்டான் அறிவழகு.

"பூவிருந்தவல்லி சாலையில் ஆவடிக்குப் பிரிந்து செல்லும் இடத்தில், கார் மிகவும் விரைவாக வந்திருக்க வேண்டும். கார் தூளாகிவிட்டது என்றே சொல்லலாம்."

"பிணம் எங்கேயிருக்கிறது?"

"கார் நொறுங்கிய இடத்திலேயே கிடக்கிறது! இன்னும் எடுக்கவில்லை! புகைப்படங்கள் எடுத்துப் பிணத்தைச் சோதனைக்கு அனுப்பப் போகிறேன்."

"அறிவழகு என் பெயர். அவருடைய மகன் நான். இப்போதே நான் புறப்பட்டு வருகிறேன்!" என்று சொல்லித் தொலைபேசியை வைத்துவிட்டுத் திரும்பினான்!

கலையரசியின் அழுகுரல் கேட்டு அப்போதுதான் மெல்ல இறங்கி வந்துகொண்டிருந்த வல்லவராயன் "என்ன அது கலையரசி ஏன் அழுகிறாள்?" என்றார்.

அறிவழகு தனது உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக் கொண்டு, "அப்பா கார் விபத்தில் இறந்துவிட்டாராம்! நான் போய்ப் பார்த்துவிட்டு வருகிறேன்! கலையரசியைப் பார்த்துக்கொள்ளுங்கள் சிற்றப்பா!" என்று சொல்லிவிட்டு அறிவழகு வெளியே ஓடினான்! ஸ்போர்ட்ஸ் காரில் ஏறி உட்கார்ந்ததும் அது காற்றாய்ப் பறந்தது ஆவடி சாலையை நோக்கி!

## 2

பூவிருந்தவல்லி சாலையில், ஆவடிக்குச் செல்லும் சாலைக்கு எதிரே ஒரு திருப்பத்தில், மல்லையாவின் கார் நொறுங்கிக் கிடந்தது.

விலை உயர்ந்த கெடிலாக்கார் அது! கார் போனதால் இழப்பில்லை! காரின் விலையை இன்சூரன்ஸ் கம்பெனியார் கொடுத்துவிடுவார்கள். ஆனால் –

மல்லையாவின் உயிர் திரும்பிவராதே!

இரண்டு மூன்று போலீஸ் வண்டிகள் அங்கே நின்று இருந்தன. கான்ஸ்டபிள்களில் பலர் இங்கும் அங்கும் ஓடிக் கொண்டிருந்தார்கள்!

போலீஸ் இலாகாவைச் சேர்ந்த ஒருவர் பல கோணங் களிலிருந்தும் புகைப்படங்களை எடுத்துக்கொண்டிருந்தார்.

அங்கே வேடிக்கை பார்க்க ஓடிவந்த மக்கள் கூட்டத்தைத் தொலைவில் செல்லும்படி விரட்டிக்கொண்டிருந்தார்கள் நான்கு கான்ஸ்டபிள்கள்.

அறிவழகு காரை விட்டு இறங்கி விபத்து நடந்த இடத் திற்கு விரைந்து சென்ற போது–

உதவிப் போலீஸ் கமிஷனரே அங்கு வந்திருந்தார். அறிவழகை அவர் தம் அருகில் வரும்படி சாடை காட்டினார். அவன், அவர் அருகில் சென்றான். பார்த்தான்.

கார் நொறுங்கிக் கிடந்தது! அதன் முன்கதவு உடைந்து தனியாக விழுந்து கிடந்தது! மல்லையா அடிபட்டு உடல் எல்லாம் இரத்தம் வழிய விழுந்து கிடந்தார்! அவருடைய கால்கள் இரண்டும் காருக்குள்ளேயே அகப்பட்டுக்கொண்டு இருந்தன! உடல் மட்டும் குப்புறக் கீழே விழுந்து தொங்குவதைப் போலிருந்த காட்சி –

அறிவழகு கைக்குட்டையால் முகத்தைச் சிறிது நேரம் மூடிக்கொண்டு, குமுறி வரும் அழுகையை அடக்கமுயன்றான்!

இப்போது ஏதாவது கேட்டால் அறிவழகு கதறி விடுவான் என்று எண்ணிய உதவிப் போலீஸ் கமிஷனர் சிறிது நேரம் பேசாமல் இருந்தார்!

போலீஸ் ஆம்புலன்சைச் சேர்ந்தவர்கள் பிணத்தை மெல்ல எடுத்து ஆம்புலன்ஸ் வண்டியில் ஏற்றினார்கள். உதவிப் போலிஸ் கமிஷனர் அறிவழகைப் பார்த்தார்! "காரில் வேறு எவரையும் காணோம். அவர் மட்டும் தனியாக வந்திருக்கிறார்!" என்றார்.

"ஆமாம். இப்போதெல்லாம் அவர் தனியாகவே காரோட்டிச் செல்லுவது உண்டு" என்றான் அறிவழகு.

"இந்தப் பக்கம் எங்கே போய்க்கொண்டிருந்தார்?" என்று கேட்டார் உதவிப் போலீஸ் கமிஷனர்.

"தெரியவில்லை. பொதுவாக அலுவலகத்திலிருந்து மாலை வீட்டுக்கு வந்துவிட்டுத்தான் மீண்டும் எங்கேயாவது புறப்படுவார். போகுமிடத்தை எங்கள் வீட்டில் உள்ளவர்களிடம் சொல்லாமல் போகமாட்டார். அலுவலகத்திலிருந்து எங்கேயோ மிகவும் அவசரமாகப் போயிருக்கிறார் என்பது தெரிகிறது!"

மல்லையாவுக்கு உரிமையுடையதாக ஒரு காகிதத் தொழிற்சாலை இருந்தது. அவர் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்தான் என்றாலும், பழைய பெருமைகளைப் பற்றியே

எண்ணிக்கொண்டு மனம் புழுங்காமல், தொழிற்சாலை ஒன்று தொடங்கித் தமது மேற்பார்வையிலேயே அதை நடத்தி வந்தார். தினமும் அவர் அவரது அலுவலகத்துக்குப் போகாமல் இருக்கமாட்டார். அறிவழகு இதைத் தான் குறிப்பிட்டான்.

“மல்லையா எப்போதுமே இப்படித்தான் காரை விரைவாகச் செலுத்துவாரா?” என்று கேட்டார் உதவிப் போலீஸ் கமிஷனர்.

“ஆமாம்” என்றான் அறிவழகு. பிறகு, “பிணத்தை எங்கு கொண்டு செல்லுகிறார்கள்?” என்று கேட்டான்.

“மருத்துவ விடுதிக்கு அனுப்புகிறேன். இது விபத்துத் தான் என்றாலும் பொதுவாகப் பிணச்சோதனை செய்யாமல் விடுவது தவறு!”

அறிவழகு உதவிப் போலீஸ் கமிஷனரைப் பார்த்தான். “உங்கள் கடமையைப்பற்றி நீங்கள் சொல்லுகிறீர்கள் எனக்குப் புரிகிறது! பிணச்சோதனையைத் தவிர்க்க முடியாதா? என் தந்தையின் உடலை அறுப்பதை எங்கள் குடும்பத்தில் எவருமே விரும்ப மாட்டார்கள்.”

“வருந்துகிறேன்... போலீஸ் இலாகாவைப் பொறுத்த வரையில் எங்கள் கடமையில் விட்டுக் கொடுக்க முடியாத நிலையில் இருக்கிறோம் நாங்கள். ஆனாலும், பிணச் சோதனையை உடனே முடித்து இரவு பத்து மணிக்குள்ளாகவே பிணத்தைக் கொடுக்க ஏற்பாடு செய்கிறேன்.”

உதவிப் போலீஸ் கமிஷனரிடம் மேலும் பேசுவதால் பயனில்லை என்பதை உணர்ந்துகொண்ட அறிவழகு.. “நன்றி” என்றான். பிறகு

கான்ஸ்டபிள் ஒருவனிடம் மிகுந்த மின்பொறி விளக்கை வாங்கிக் காருக்குள் அடித்துப் பார்த்தான்.

முன்சீட்டில் இரத்தம் சிதறிக் கிடந்தது. பின் சீட்டு இடம் பெயர்ந்து சரிந்து விழுந்து கிடந்தது. பின் சீட்டுக்குக் கீழே –

அழகான கைப்பை ஒன்று விழுந்து கிடந்தது. அதை மெல்ல எடுத்தான் அவன்.

பெண்கள் கையில் எடுத்துச் செல்லும் ஆடம்பரப் பை அது! புதிய பை! வெல்வெட்டினால் தைக்கப்பட்டிருந்த அந்தப் பை, சற்று பெரிதாகவே இருந்தது! அதன் வாய்ப்புறம் திறந்து கிடந்தது! உள்ளே –

எதையும் காணோமே!

அந்தப் புதிய கைப்பை எவருடையதோ? அவனுடைய தங்கை கலையரசியிடம் அந்த மாதிரிப் பை இல்லை. அவனுக்குத் தெரிந்தவர்கள் எவரும் இந்த மாதிரிப் பை வைத்துக்கொண்டிருந்ததாக அவனுக்கு நினைவில்லை!

"என்ன பை அது எவருடையது?" என்று கேட்டார் உதவிப் போலீஸ் கமிஷனர்.

"என்னுடைய தங்கையின் பை இது! காரில் வைத்து விட்டுப் பங்களாவில் தேடிக்கொண்டிருந்தான்!" என்று சொல்லி அந்தப் பையைப் பாதுகாப்புடன் வைத்துக் கொண்டான்.

"இன்னும் ஏதாவது காரில் கிடக்கிறதா பாருங்கள்" என்றார் உதவிப் போலீஸ் கமிஷனர். உடனே அங்கே இருந்த கான்ஸ்டபிள்கள் அவ்வளவு பேர்களும் மின்பொறி விளக்கை அடித்துப் பார்த்தார்கள்.

வேறு எதுவும் இல்லை!

உதவிப் போலீஸ் கமிஷனர் புறப்பட்டபோது, "அறிவழகு சரியாகப் பத்து மணிக்கு வந்து பிணத்தைப் பெற்றுச் செல்லுங்கள்" என்று சொல்லிவிட்டுக் காரில் ஏறிச் சென்றுவிட்டார்.

அறிவழகு. பிணம் சென்ற வண்டி போகும் வரையில் பார்த்திருந்துவிட்டுத் தனது காரில் ஏறினான். அந்தக் கைப்பை –

அதுதான் புரியவில்லை அவனுக்கு!

மல்லையாவுக்கு எப்போதுமே ஒரு பழக்கம் உண்டு. தெரிந்தவர்கள் எவராவது நடந்து சென்றால், அவர்களைத் தமது காரில் ஏற்றிக்கொண்டுபோய் விடாமல் போக மாட்டார்.

நம் குடும்பத்துக்குத் தெரிந்த பெண் எவளாவது கார் ஏறி இருக்கலாம். அவள் வழியில் இறங்கும் போது, கைப் பையை மறந்து விட்டுவிட்டுப் போயிருப்பாள்

இப்படித்தான் இருக்கும் என்று எண்ணியது அவள் மனம். அந்தப் பெண் எவளோ? நல்ல வேளையாக அவள் இறங்கியபின் விபத்து நடந்திருக்கிறது! இல்லாவிட்டால் அவளும் அல்லவா செத்துப் போயிருப்பாள்!

## 3

பங்களாவை அடைந்ததும், அவன் காரை நிறுத்தி விட்டுப் பங்களாவுக்குள் சென்றான். அவன் கையிலிருந்த கைப்பையைக் கலையரசியும் வல்லவராயனும் பார்த்தார்கள்'

"எப்படி நடந்தது?" என்று கேட்டார் வல்லவராயன்

"கார் விரைவாகச் சென்றிருக்கிறது. கவனக் குறைவால் ஸ்டீரிங் தவறிவிட்டிருக்கும். கார் மரத்தின் மீது மோதி அப்படியே நசுங்கிவிட்டது!"

"பிணம் எங்கே?" என்று கேட்டார் வல்லவராயன்.

"சோதனைக்கு அனுப்பி வைத்திருக்கிறார்கள்!"

"என்ன சோதனைக்கா? நாம் யார் என்பது அவர்களுக்குத் தெரியாது? உதவிப் போலீஸ் கமிஷனரிடம் நான் தொடர்பு

கொள்கிறேன். விபத்து தான் என்று முடிவாகிவிட்ட பிறகு பிணச்சோதனை எதற்கு?'' என்று தொலைபேசியை எடுக்க ஓடினார், தொலைபேசியில் போலீஸ் இலாகாவுடன் தொடர்பு கொள்ள!

"வேண்டாம் சிற்றப்பா, நான் எவ்வளவு சொல்லியும் பயனில்லை! அவர்கள் கடமையைச் செய்கிறார்கள், பத்து மணிக்கு நாம் இருவரும் சென்று பிணத்தைக் கொண்டுவந்து விடுவோம்!" என்று வல்லவராயனைத் தடுத்துவிட்டான் அறிவழகு.

அவர் தவித்தார். "இது என்ன பை?" என்று கேட்டார்.

"காரின் பின் சீட்டில் கிடந்தது. கலையரசியின் பை என்று சொல்லிக்கொண்டு வந்துவிட்டேன் இதை!"

''என்னுடைய பை அல்லவே இது!'' என்றாள் கலையரசி.

"எனக்குத் தெரியாதா? எவளோ ஒரு பெண் காரில் ஏறிச் சென்றிருக்கிறாள். அவள் வழியில் இறங்கும்போது பையை மறந்துவிட்டுச் சென்றிருக்கிறாள்! அவள் இறங்கிய பிறகுதான் விபத்து நடந்திருக்கிறது! யார் அந்தப் பெண் என்று தெரியவில்லை!"

அவன் அந்தப் பையை எடுத்துக்கொண்டு மாடிக்குச் சென்றான். அதை நிலைப்பேழையில் வைத்துப் பூட்டிவிட்டு கடிகாரத்தைப் பார்த்துக்கொண்டிருந்தான். மணி ஒன்பது–

ஒன்பதரை மணிக்கு அவன் மருத்துவ விடுதிக்குப் புறப்பட ஆயத்தம் செய்துகொண்டிருந்தான். அந்த நேரத்தில் –

தொலைபேசி மணி அடித்தது!

அறிவழகு பாய்ந்து ஓடினான். கூடத்திலிருந்த தொலை பேசியை எடுத்தான்.

"அறிவழகு பேசுகிறேன்" என்றான்.

"உதவிப் போலீஸ் கமிஷனர் பேசுகிறேன். பிணச் சோதனை முடிந்து விட்டது! ஆனால்"

"ஆனால் என்ன?"

"மல்லையா கார் விபத்தில் மட்டும் இறக்கவில்லை!"

"என்ன!"

"ஆமாம்! அவர் உடலில் நஞ்சு பரவியிருக்கிறது! அவர் பின் கழுத்தில் கருநாகம் கடித்திருக்கிறது! கருநாகத்தின் நஞ்சு அவர் உடலில் பரவி அவர் இறந்த பிறகே கார் விபத்து நடந்திருக்க வேண்டும்!"

"புரியவில்லையே!"

"எனக்கும்தான் ஒன்றும் புரியவில்லை! சோதனை செய்த டாக்டர் இதை உறுதியுடன் சொல்லுகிறார். விபத்து நடக்கு முன்பே அவர் இறந்து போயிருக்க வேண்டும்!"

அறிவழகு சிறிது நேரம் சிந்தனை செய்தபடி பேசாமல் இருந்தான். இதற்குள் உதவிப் போலீஸ் கமிஷனர், "எப்படி இந்த விபத்து நடந்திருக்கும் என்பதைப்பற்றி எங்கள் முடிவைப் பின் தெரிவிக்கிறோம். நீங்கள் பிணத்தை எடுத்துச் கொண்டு போகலாம்" என்றார்.

"ஆகட்டும்" என்றான் அறிவழகு.

"என்ன! என்ன!" என்று ஆவலுடன். துடிப்புடன் பதறிக் கேட்டார் வல்லவராயன்!

"அப்பா விபத்தினால் இறக்கவில்லையாம்! அவர் உடலெல்லாம் கொடிய நஞ்சு பரவியிருக்கிறதாம்! பிணச்சோதனை செய்த டாக்டர், கருநாகம் ஒன்று அப்பா கழுத்தின் பின்பக்கம் கடித்திருக்கிறது என்றும், அந்த நஞ்சுதான் உடல் முழுவதும் பரவியிருக்கிறது என்றும் உறுதிப்படுத்திவிட்டாராம்!"

"கருநாகமா!" என்றார் வல்லவராயன் அச்சம் கலந்த குரலில். "எப்படிக் கடித்திருக்கும்? காரில் எப்படிக் கருநாகம்

வந்திருக்கும்?'' என்று வியப்புடனும் கொதிப்புடனும் கேட்டார்.

“புறப்படுங்கள். சிற்றப்பா! நாம் போய்ப் பிணத்தைக் கொண்டு வருவோம். நாங்கள் கொடுத்து வைத்தது அவ்வளவுதான்!” என்றான் அறிவழகு.

துக்கம் அவனையும் அறியாமல் அவன் நெஞ்சை அடைத்தது!

அறிவழகு காரில் புறப்பட்டபோது வல்லவராயன் மிகமிக விரைந்து ஓடிவந்து காரில் ஏறினார். அவர் காரில் ஏறுமுன் காரின் பின் சீட்டிலும், கால் வைக்கும் இடங்களிலும் கூர்ந்து பார்த்துவிட்டுக் காரில் ஏறினார்.

அவருக்கு அந்தக் காரிலும் ஏதாவது கருநாகம் இருக்குமோ என்று ஐயம்!

## 4

இரண்டு நாள்களுக்குப் பின் தான் அறிவழகுக்கு ஓய்வு கிடைத்தது.

மல்லையா மடிந்ததைக் கேட்டதும் உறவினர்களும் நண்பர்களும் நேரில் வந்து தங்களது வருத்தத்தைத் தெரிவித்துக் கொண்டார்கள். மகிழ்ச்சியில் மூழ்கிக் கிடந்த அந்தப் பங்களாவில் சோகம் பரவி நின்றது!

கலையரசியால் தனது உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த முடிக்கவில்லை! துன்பத்தின் மற்றொரு சின்னமாக அவள் நின்றாள்.

அறிவழகு எப்போதும் எதிர்காலத்தைப்பற்றிச் சிந்திப்பவன். நடந்து போனதைப்பற்றியே நினைந்து உருகுவதில் பயனில்லை என்பதை அறிந்தவன் அவன்! ஆகையால், அவன் தனது கலக்கத்தை வெளியே காட்டிய கொள்ளாமல் இருந்தான்!

வல்லவராயன் தனிக்கட்டை. தாரத்தை இழந்தவர். பிள்ளைப்பேறு அவருக்குக் கிடையாது! அறிவழகும் கலையரசியும் தாம் அவருக்குப் பிள்ளைகள்! அவர்கள் இருவர்மீதும் அவர் உயிரையே வைத்திருந்தார்! ஆகையால், அவருக்கு நாளுக்கு நாள் அவர் உயிரின்மீது ஆசை மிகுந்துகொண்டே வந்தது. அறிவழகும், கலையரசியும் தாயில்லாப் பிள்ளகள். அவர்கள் சிறு வயதிலேயே தாயை இழந்து விட்டார்கள். அவர்களுக்கு அன்பு காட்ட இனி இவ்வுலகில் மல்லையாவும் இல்லையே, இனி நாம்தான் வாழவேண்டும் என்று வல்லவராயன் எண்ணிவிட்டாரோ என்னவோ? அவர் இப்போது எதைக் கண்டாலும் பாம்புதானோ என்று அஞ்சினார்! இருளில் வெளியே போக அஞ்சினார்! அவர் தூணின் நிழலைக் கண்டு அஞ்சினார். கொடிகள் சன்னல் ஓரமாக ஆடுவதைக் கண்டு மருண்டார். கட்டிலில் படுக்குமுன் மின்பொறி விளக்கடித்து மேலும் கீழுமாகப் பல தடவைகள் பார்த்தார். இதையெல்லாம் கூர்ந்து கவனித்த அறிவழகு, “என்ன சிற்றப்பா, பாம்பு நம் வீட்டில் வந்து விடுமோ என்று அஞ்சுகிறீர்களா?” என்று கேட்டான்!

“ஒன்றுமில்லை. எதற்கும் விழிப்புடன் இருப்பது நல்லது. தோட்டத்தில் ஏன் இப்படிக் கொடிகள் படர்ந்திருக்கின்றன! தோட்டக்காரனிடம் இந்தக் கொடிகளைப் பிடுங்கி எறியும்படி சொல்லவேண்டும். மரங்களின் கிளைகளை ஒட்ட வெட்டி விட வேண்டும்!” என்றார் வல்லவராயன். வல்லவராயனின் போக்குப் புது மாதிரியாக இருப்பதைக் கண்டு, “இந்தப் பங்களாவில் பாம்பு வந்துவிடுமோ? என்று அஞ்சினால், பிறகு இந்த உலகில் வாழவே முடியாது! நீங்கள் அஞ்சாமல் இருங்கள்!” என்றான் அறிவழகு.

“உனக்கு என்ன தெரியும்? எப்போதுமே விழிப்புடன் இருப்பது நமக்கு நல்லது!” என்றார் வல்லவராயன்.

காரணமில்லாமல் ஏன் சிற்றப்பா இப்படிப் பேசுகிறார்! என்று வியப்படைந்தான் அறிவழகு.

கல்லூரியில் இரசாயன ஆராய்ச்சிகள் செய்வதில் கைதேர்ந்தவன் அறிவழகு. அவன் பங்களாவிலும், ஓர் ஆராய்ச்சிக் கூடம் வைத்திருந்தான். அவன் தன் தந்தையின் காரில் கண்டெடுத்த பையை ஆராய்ச்சிக் கூடத்துக்குக் கொண்டுசென்று அதைப் பூதக்கண்ணாடியின் உதவி கொண்டு சோதித்துப் பார்த்தான் அந்தப் பை புதிய பை, அழுக்கடையாத பை. அந்தப் பையின் உள்ளே எவரும் எதுவும் வைத்திருந்ததாகத் தெரியவில்லை! பொதுவாகப் பெண்களின் பைகளைப் பார்த்தால் உள்ளே முகப் பவுடர் சிந்திக் கிடக்கும்! ஆனால்,

இந்தப் பையில் ஒரே ஒரு சிறிய செதில் கிடந்தது. கறுப்பாகப் பளபளப்பாகக் கிடந்த அந்தச் செதிலை எடுத்து நீண்ட நேரம் சோதித்துப் பார்த்தான் அறிவழகு. அது–

பாம்பின் செதில்! கருநாகத்தின் உடலிலுள்ள செதில்!

அதைக் கண்டதும், அவன் செய்த முடிவு இதுதான்: "எவளோ ஒரு பெண் காரில் பின் சீட்டில் ஏறி உட்கார்ந்திருக்கிறாள். வழியில் அவள் இறங்கும்போது கைப்பையைத் திறந்து அப்படியே வைத்துவிட்டு இறங்கிவிட்டிருக்கிறாள். கார் மீண்டும் புறப்பட்டிருக்கிறது. கார் ஓடும் ஓசை கேட்டு அச்சத்துடன் பையைவிட்டு வெளியே வந்த கருநாகம் காரை ஓட்டிச் சென்ற அப்பாவின் கழுத்தில் தாவிக் கடித்துவிட்டுச் கீழே குதித்து ஓடிவிட்டிருக்கிறது. கடித்தது என்னவென்று அறியுமுன்பே உடலில் பரவிய கருநாகத்தின் நஞ்சு அப்பாவின் உயிரை விழுங்கிவிட்டது. விரைவாகச் சென்றுகொண்டிருந்த கார், அவர் இறந்த பிறகு, ஸ்டீரிங் தவறி மரத்தில் மோதி விபத்து நடந்திருக்கிறது!"

# 5

மல்லையா மறைந்துபோய் இரண்டு வாரங்களுக்கு மேல் ஆகிவிட்டன!

அறிவழகு தந்தையின் மறைவை மறந்துவிட்டதைப் போலிருந்தாலும், உள்ளத்தில் முள் தைத்ததைப்போல் காரில் கிடந்த அந்தக் கைப்பை, அதுவும் ஒரு பெண்ணின் ஆடம்பரக் கைப்பை அவனை உறுத்திக் கொண்டேயிருந்தது!

அவனுடைய தந்தை மல்லையாவை ஒழித்துக்கட்ட வேண்டும் என்ற எண்ணத்துடன் எவராது காரில் அந்தக் கைப்பையை விட்டுச் சென்றிருப்பார்கள் என்றால் அது வியப்பிற்குரிய செயல்தான்! மல்லையாவுக்குப் பகைவர்கள் என்று சொல்லிக்கொள்ளும்படி எவரும் இலரே!

காரணம் எதுவுமின்றி அவர் மீது கருநாகத்தை ஏன் ஏவி விடவேண்டும்? இது அறிவழகுக்குப் புரியாத புதிராகவே இருந்தது!

மல்லையா மறைந்தபிறகு, வல்லவராயன் அலுவலகத்தையும் தொழிற்சாலையையும் கவனிக்கத் தொடங்கினார்? எப்போதும் சரித்திரப் புத்தகங்களையும், சரித்திரக் கதைப் புத்தகங்களையும் படித்துக் கொண்டிருக்கும் அவரை அலுவலகப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளும்படி அறிவழகுதான் வலியுறுத்தினான்.

''அண்ணா மறைந்த பிறகு தொழிற்சாலை எதற்கு? நமக்கென்ன பணமில்லையா, கௌரவமில்லையா? 'பொழுது போகவில்லையே, பயனுள்ள முறையில் ஏதாவது தொழில் செய்யலாமே' என்று அண்ணா இந்த தொழிற்சாலையைத் தொடங்கினார். வேண்டுமானால் நீயே தொழிற்சாலையைக் கவனித்துக்கொள்!'' என்று முதலில் சொன்னார் வல்லவராயன்.

''என்னுடைய படிப்பை அரைகுறையாக நிறுத்திக் கொள்ளும்படி சொல்லுகிறீர்களா?'' என்று கேட்டான் அறிவழகு. வல்லவராயனை எப்படி மடக்க வேண்டும் என்பது அவனுக்கு நன்றாகத் தெரியும்.

“உன்னுடைய படிப்பை நிறுத்திவிடும்படி நான் சொல்ல வில்லையே! மேல் நாட்டுக்கு அனுப்பிப் படிக்க வைக்க வேண்டும் என்று உன் தந்தை அடிக்கடி சொல்லிக்கொண் டிருந்தார். நானே உன்னை மேல்நாட்டுக்கு அனுப்ப ஏற்பாடுகள் செய்கிறேன். தொழிற்சாலைதான் வேண்டாம் என்று நான் சொல்லுகிறேன்.”

“தொழிற்சாலையை மூட வேண்டாம். நீங்கள் தினமும் தொழிற்சாலைக்குச் சென்று மேற்பார்வை செய்தால் போதும் நீங்கள் இங்கே படிப்பதற்குப் பதில் தொழிற்சாலையின் அலுவலகத்தில் உட்கார்ந்து படியுங்கள்!'' என்றார் அறி வழகு!

வேறு வழி எதுவும் இல்லாமல் “ஆகட்டும்!'' என்றார் வல்லவராயன்.

அறிவழகும், கலையரசியும் ஒரே கல்லூரியில் படித்து வந்தார்கள். ஆனால் இருவரும் வெவ்வேறு வகுப்புகளில் படித்து வந்தார்கள்.

வல்லவராயன் நேரம் தவறாமல் அலுவலகத்துக்குச் சென்று நேரம் தவறாமல் பங்களாவுக்குத் திரும்பி வந்துகொண் டிருந்தார். ஆனால்--

அவருடைய பார்வையில், பேச்சில், செயலில் அடியோடு ஏற்பட்டிருந்த மாற்றத்தைக் கண்டுகொண்டுவிட்டான் அறிவழகு!

பங்களாவில் பகலில் பணியாள்களைத் தவிர வேறு எவரும் இருக்கமாட்டார்கள்.

மாலை ஐந்து மணிக்குத்தான் கல்லூரியிலிருந்து அறிவழகும் கலையரசியும் திரும்பி வருவார்கள். அவர்கள் வரும் அதே நேரத்துக்கு வல்லவராயனும் காரில் வந்து இறங்குவார். அவர் காரிலிருந்து இறங்கும்போதும் சரி, காரில் ஏறும்போதும் சரி, கீழே சுற்றிலும் உற்றுப்பார்ப்பார்.

காருக்குள் உற்றுப் பார்த்துவிட்டுத்தான் அவர் காரில் ஏறுவார்.

இருட்டிவிட்டால் அவர் பங்களாவை விட்டு வெளியே செல்லமாட்டார். பங்களாவில் இரவில் எல்லா விளக்குகளும் ஒளி தந்துகொண்டிருந்தன! மூலை முடுக்குகளில் எல்லாம் உற்றுப்பார்க்கும் போது–

அவர் முகத்தில் தோன்றிய அச்சத்தை அவரால் மறைக்க முடியவில்லை!

அவருடைய போக்கே புது வகையாக இருந்ததை கண்டு சிற்றப்பாவுடன் பேச்சுக் கொடுத்தான் அறிவழகு "என்ன சிற்றப்பா, அப்படி உற்று உற்றுப் பார்க்கிறீர்கள்? அப்பா செத்துப்போனதிலிருந்து நீங்கள் இப்படி அஞ்சு கிறீர்களே! நம்முடைய பங்களாவில் பாம்பு வராது! நீங்கள் அஞ்சாதீர்கள்!" என்றான்.

வல்லவராயன் மெல்லச் சிரித்தார். ''நான் அஞ்சவில்லை. எதற்கும் எப்போதும் விழிப்புடன் நாம் இருக்கவேண்டும். உனக்குத் தெரியாது, நம்முடைய பங்களாவைச் சுற்றிலும் பார். செடிகளும் கொடிகளும் அடர்ந்து வளர்ந்திருக்கின்றன ஏதோ அழகுக்கு ஒன்றிரண்டு பூச்செடிகள் இருக்க வேண்டியதுதான்! இப்படியா?'' என்றார்.

"நீங்கள் ஏனோ எப்போதும் பாம்பைப்பற்றியே சிந்தித்தும் கொண்டிருக்கிறீர்கள்! அஞ்சாதீர்கள்! விட்டுத் தள்ளுங்கள் நான் இப்போது ஒரு மருந்து செய்துகொண்டிருக்கிறேன்: தெரியுமா உங்களுக்கு?" என்றான் அறிவழகு. அவர்

திகைப்புடன் நின்றார்! "மருந்தா? எதற்கு? பாம்பு கடித்தவர்களைப் பிழைக்கவைக்கவா?"

"கருநாகம் போன்ற சிலபாம்புகள் கடித்தால், என்னைப் பாம்பு கடித்துவிட்டது" என்று மனிதன் சொல்லுவதற்குக்கூட நேரமில்லால் செத்துப் போகிறான்! அப்புறம் அந்த மருந்துகளால் ஏது பலன்?"

"உண்மைதான்! உன் அப்பாவும் அப்படித்தான் இறந்து போயிருக்கிறார்."

"நான் கண்டுபிடித்திருக்கும் மருந்தைப்பற்றிக் கேளுங்கள்!"

"என்ன மருந்து அது? ஊசி போட்டுக் கொள்வதைப் போல் முதலிலேயே அந்த மருந்தை உடலில் செலுத்திக் கொள்ள வேண்டுமா? பாம்பு கடிப்பதற்கு முன்பே இப்படி ஓர் ஏற்பாடா?"

"உடலுக்குள் செலுத்தும் மருந்து அல்ல அது. வெளியே! தெளிக்கும் மருந்து அது! பங்களாவில் அந்த மருந்தைத் தெளித்துவிட்டால், அந்த மருந்தில் வாசனை இருக்கும் வரை பாம்பு வராது!"

"அப்படியா! எங்கே அந்த மருந்து? நம் பங்களா முழு வதும் தெளித்துவிடலாமே!" என்று ஆவலுடன் சொன்னார் வல்லவராயன்.

"பரபரப்புக் கொள்ளாதீர்கள்! நாளைக்குத் தெளித்து விட்டால் போகிறது!" என்றான் அவன்.

அந்த மருந்தைப் பார்க்க எழுந்து அறிவழகின் ஆராய்ச்சி அறைக்கே வந்துவிட்டார் வல்லவராயன்.

ஒரு சிறிய புட்டியில் பச்சை நிற மருந்து மேசைமீது இருந்தது.

அறிவழகு அந்தப் பச்சை மருந்தைக் காட்டி, "இதுதான் அந்த மருந்து! ஆனால் இன்னும் என் ஆராய்ச்சி முற்றுப் பெறவில்லை. அதனால் தான் நாளைக்கு மருந்தைத் தெளித்துக் கொள்ளலாம் என்று நான் சொல்கிறேன்!" என்றான் அறிவழகு.

வல்லவராயன் அந்த ஆராய்ச்சிக் கூடத்தை ஒரு முறை சுற்றிப்பார்த்தார். மேசைமீது ஒரு பக்கம் விபத்துக்குள்ளான காரிலிருந்து அறிவழகு கொண்டுவந்த அந்தக் கைப்பை இருந்தது. அதைக் கண்டதும்–

"இந்தப் பை எவருடையது என்று தெரியவில்லையா?" என்றார்.

"இல்லை!"

"இதை எதற்காக இங்கே வைத்திருக்கிறாய்?"

"அதற்கு உரியவரிடம் பையைச் சேர்க்கவேண்டும் என்று பார்க்கிறேன்! எவரும் அதைக் கேட்க வில்லை!"

"அதில் எதற்காக உனக்கு அவ்வளவு அக்கறை?"

"அப்பாவைக் கடித்த பாம்பு அந்தப் பையிலிருந்துதான் வெளிக்கிளம்பி இருக்கிறது!"

"என்ன!"

"ஆமாம் சிற்றப்பா. பாம்பின் செதில் ஒன்று அந்தக் கைப்பைக்குள் கிடந்தது!" என்றான் அறிவழகு!

வல்லவராயனுக்குத் தலை சுற்றுவது போலிருந்தது. அவருடைய உடல் இலேசாக நடுங்கியது! அவர் ஏதோ சொல்ல வேண்டும் என்று துடித்தார். பிறகு –

சொல்லவந்ததை அடக்கிக்கொண்டு பேசாமல் அவர் போய்விட்டார்.